सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

**யாழ்ப்பாணம்**

## ஊடக அறிக்கை

## குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் தினம்

இந்தியாவின் பிரபல கவிஞரும், எழுத்தாளரும், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவருமான குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் *1922, 1928* மற்றும் *1934*ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டமையை நினைவு கூரும் முகமாகவும் அவரது *155*ஆவது பிறந்த தின நினைவு நாளை கொண்டாடும் முகமாகவும் ஓர் சிறப்பு நினைவுப் பேருரை உள்ளடங்கிய கலா நிகழ்வினை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தினருடன் இணைந்து எதிர்வரும் சனிக்கிழமை 9 ஜுலை, *2016* அன்று காலை *9.30* மணிக்கு மருத்துவபீட வளாகத்தில் அமைந்துள்ள ஹுவர் அரங்கில் நடாத்த இந்தியத்துணைத்தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.

நினைவுப் பேருரையை இந்தியாவில் மேற்கு வங்கத்தில் அமைந்துள்ள, விஸ்வபாரதி (சாந்திநிகேதன்) பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுவபன்குமார் தத்தா அவர்கள் வழங்குவார். **விஸ்வபாரதி**, குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் அவர்களால் *1921*இல் உருவாக்கப்பட்டு, *1951* இல் இந்தியப் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தினால் “தேசிய முக்கியத்துவம் வாய்ந்த” ஒரு மத்திய பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் குடியரசுத்தலைவர் அவர்களை சகல அதிகாரங்களையும் கொண்ட வருகையாளராகவும் (Visitor), இந்தியப் பிரதமர் அவர்களை வேந்தராகவும், மேற்கு வங்க ஆளுனர் அவர்களை முதல்வராகவும் கொண்டுள்ள சிறப்புக்களை கொண்டது **விஸ்வபாரதி**. இதன் துணைவேந்தரை இந்தியக் குடியரசுத்தலைவர் அவர்கள் நியமிப்பார்.

பேராசிரியர் சுவபன்குமார் தத்தா அவர்கள் இந்தியாவின் தாவர உயிரியல் தொழில்நுட்பதுறையில் பிரபல விஞ்ஞானியுமாவார். இவர் அனைத்து அறிவியல் துறைசார்ந்த 25 இந்திய விஞ்ஞானிகளில் முக்கிய இடத்தை வகிப்பவராவார். கலாநிதி தத்தா அவர்கள் இந்திய இயற்கை அறிவியல் ஆய்வாளராகவும், உலக அறிவியல் மைய ஆய்வாளராகவும் விளங்குகின்றார்.

பேராசிரியர் சுவபன்குமார் தத்தா அவர்கள் இந்திய அரசாங்கத்தின் விவசாய ஆராய்ச்சிக்கான இந்தியப் பேரவையின் துணை இயக்குனர் நாயகமாக முன்னர் பணியாற்றினார்.

***5 ஜுலை, 2016***
***யாழ்ப்பாணம்***